# தமிழ் இலக்கியங்களில் பாசிகள்

**செ.கணேசமூர்த்தி,**
**உதவிப்பேராசிரியர் – தமிழ்த்துறை,**
**சுவாமி தயானந்தா கலை மற்றும்**
**அறிவியல் கல்லூரி,**
**மஞ்சக்குடி 610612**

**67**

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் இலக்கியங்களை பல்துறைச் சார்ந்த பல்கலைக்கழகம் எனலாம். அவற்றில் சொல்லப்படாத செய்திகளே இல்லை. மனிதனின் வாழ்வியல், கலை, பண்பாடு, அறிவியல் முதலான எல்லா செய்திகளும் அவற்றில் இடம்பெற்றுள்ளன. தாவர அறிவியல் குறித்து தமிழ் இலக்கியங்கள் விரிவாகப் பேசுகின்றன. அவற்றில் தாவரங்களுள் ஒன்றான பாசிகள் குறித்து சங்க இலக்கிய நூல்களுள் ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை முதலான நூல்கள் விரிவாக பேசுகின்றன. பிற்கால நூல்களான இராவண காவியம், பாரதியாரின் பாடல்கள் போன்றவற்றிலும் பாசிகள் குறித்த தகவல்கள் கிடைக்கின்றன. அவற்றை இக்கட்டுரை விரிவாக கூறுகிறது.

**முன்னுரை**

இலக்கியம் என்பது மனித வாழ்வியலை வெளிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அவற்றோடு தொடர்புடைய இயற்கை வளங்கள் அறிவியல் சிந்தைனகள் போன்றவற்றையும் வெளிக்கொணர்வாக அமைய வேண்டும். அந்த வகையில் தமிழ் இலக்கியங்கள் எந்த விதத்திலும் குறைச்சல் இல்லை. தமிழ் இலக்கியங்களில் சொல்லப்படாத செய்திகளே இல்லை. அந்த அளவிற்கு அவை பன்முகத்தன்மை கொண்டதாக விளங்குகின்றன. தமிழ் இலக்கியங்களில் குறிப்பாக இயற்கை வர்ணனைகள் அறிவியல் சிந்தனைகள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. அவற்றில் இயற்கை தாவரங்களுள் ஒன்றான பாசிகள் குறித்து இக்கட்டுரை ஆய்கிறது.

**பாசிகள் விளக்கம்**

தாவர வகையில் மிகச்சிறியதாக கருதப்படுவது பாசிகள் ஆகும். இதனை ஆங்கிலத்தில் (Algae) என அழைப்பர். இத்தாவரம் பல்வேறு குழுக்களாக சேர்ந்து ஒளிச்சேர்க்கை செய்ய வல்ல உயிரினமாகும். நெடுங்காலமாக பாசிகள் எளிய தாவர வகைகளாக கருதப்பட்டாலும் சிலப்பாசிகள் உயர் தவார அமைப்பைப் பெற்றிருக்கின்றன. பாசிகள் பல வகைப்படும். அவற்றில் குறிப்பாக பழுப்பு நிற பாசி, செம்பாசி, நீலப்பசும்பாசி, முதலானவற்றை குறிப்பிடலாம். தமிழ் இலக்கியங்களில் பாசிகள் ஆல்கஹால் பற்றி அறிவியல் ரீதியாக வேறுபடுத்தாமையால் இரண்டையும் வழங்க ஒரே சொல்லாட்சியே பயன்படுத்தப்பட்டது.

நீர்தேங்கிய பகுதிகளில் இவ்வகைத் தாவரம் காணப்படும் என்பதை சங்க இலக்கியங்களுள் ஒன்றான மலைப்படுகடாம்

**"நீரச்செரு வீழ்ந்த பாசியும் அதாஅன்று**

**உளர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்"** (மலைபடுகடாம்)

எனக் கூறுகிறது. மேலும், மலைப்படுகடாம் பாசி வகைத்தாவரங்களைப் பற்றி விரிவாகக் கூறுகின்றன. பாசிகள் வழுக்கும் தன்மைக்கொண்டது என்றும், தெரிவிக்கிறது. நீரின் பரப்பிலும் பாசி மெல்லிய அடைப்போன்று மிதக்கும் தன்மைக் கொண்டது என்று நற்றிணையும், பாசியில் சிறிய இலை வேர்கள் காணப்படும் என்பதை

**"ஊருண் கேணிப் பகட்டிலைப்பாசி**

**வேர் புறை சிதாஅர் நீக்கி "** (புறம்.பா.392:13-14)

எனப் புறநானூறும்,

**"பாசிவேரின் மாசொடு குறைந்த**

துன்னற் சிதாஅர் நீக்கி" (பொரு - அ.153-54)

என பொருநராற்றுப்படையும் விரிவாக விவரிக்கின்றன. இவற்றிலிருந்து பாசிகள் எத்தகைய தன்மை கொண்டன என்பதை அறியலாம்.

**ஐங்குறுநூற்றில் பாசி**

சங்க இலக்கிங்களுள் ஒன்றான ஐங்குறுநூற்றின் தலைவன் ஒருவன் தலைவியைக் காண்பதற்காக இரவு நேரத்தில் வருகின்றான். அப்போது மழையில் நனைந்த மாலையை அணிந்துள்ளான். ஒளி பொருந்திய வாளை தனது இடையில் கட்டியுள்ளான். பல நீர்நிலைகள் கடந்து வந்தால் அவனது கால்களில் பாசிகள் படிந்து காணப்பட்டன. என்பதை,

**"அன்னாய் வாழி வேண் டன்னை உவக்காண்**
**மாரிக் குளத்துக் காப்பாள் அன்னன்**
**தூவலின் நனைந்த தொடலை ஒள்வாழ்**
**பாசி சூழ்ந்த பெருங்கழல்**

**தண் பனி வைகிய வைக்கச் சினனே!"** (ஐங்கு - 206)

என ஐங்குறுநூற்று பாடல் குறிப்பிடுகிறது. இவற்றிலிருந்து பாசிகள் நீர்நிலைகளில் படும் பொருள்கள் மீது படியும் தன்மை கொண்டவை என்பது புலனாகிறது.

**குறுந்தொகையில் பாசி**

தலைவனைப் பிரிந்த தலைவியானவள் தோழியிடம் பசலையானது தலைவன் நம்மை தீண்டும் தோறும் நம் உடலை விட்டு நீங்குகிறது. பிரியும் தோறும் உடலில் பரவுகின்றது. இந்தச் செயல் ஊரிலுள்ள மக்களால் உண்ணப்படும் நீரையுடைய கிணற்றில் படர்ந்திருக்கின்ற பாசியை ஒத்துருக்கின்றது என்பதை

**"ஊருண் கேணி யுண்குறைத் தொக்க**
**பாசி யற்றே பசலை காதலர்**
**தொடுவுழி தொடுவுழி நீங்கி**
**விடுவுழி விடுவுழி படித்த லானே!"** (குறு - 399)

என்ற பாடல் வழி கூறுகின்றது. இவற்றின் வழி பாசி நீரில் படர்ந்திருக்கும் என்பதும் அது நீரில் நாம் இறங்கும் போது விலகியும் நாம் வெளியேறும் போது படர்ந்தும் காணப்படும் என்ற செய்தி அறியமுடிகிறது.

**நற்றிணையில் பாசி**

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான நற்றிணையில் தலைவனின் பிரிவால் நலிவுற்ற தலைவியை நோக்கி என் அன்புத்தலைவியே நான் சொல்வதை கேட்பாயாக. நம் மலைநாட்டின் காட்டாறு ஓடுகிறது. அந்த ஆற்று நீரில் பாசி எங்கும் பரவி இருக்கும். பாசியை அங்கும் இங்கும் அலைகழிக்கும் வெண்மையான அறிவி நீர் துறையில் யானை புலியோடும் சண்டையிடும் வேட்டுவர் புண்பட்ட யானையின் தந்தத்தினை எடுக்க யானையின் மீது அம்பு தொடுப்பர் அதனால் யானை பீளிறும் சத்தம் இடிமுழக்கம் போல் கேட்கும். அத்தகு சிறப்பு பொருந்திய மலைக்கு உரிய தலைவன் இப்போது வருவான் என்று அறிவுரை கூறும் பாடலில் பாசி பற்றி குறிப்பு காணப்படுகிறது.

**"அமுதம் உண்க, நம் அயல் இலாட்டி**
**இடங்கில் அன்ன இட்டுக் கரைக் காண்யாற்றுக்**
**கலங்கும் பாசி நீர் அலைக் கலாவ**
**ஒளிறு வெள்அருவி ஒண்துறை மருத்து"** (நற்றி.65:1-4)

இப்பாடலில் அருவிகளில் படர்ந்திருக்கும் பாசிகள் அங்கும் இங்கும் அலைக்கழிக்கப்படும் என்ற செய்தி அறியமுடிகிறது.

**இராவண காவியத்தில் பாசி**

இராவணனின் பெருமைப்பேசும் காப்பியம் இராவண காவியம் ஆகும். அவற்றில் பகைவர் ஒருவரோடு ஒருவர் தாக்கி போரிடும் போது குற்றமில்லாத வீரர்கள் பாசிப்போல் பொருந்தி போரிட்டனர் என்ற செய்தி காணப்படுகிறது.

**"கூசி லாது கோல் கேள்வன் முதலைய**
**ஏசி லாநீர்க் கிடங்கின் னிடுதலை**
**முாசி லாத மறவ ரெதிரெதில்**
**பாசி போல படிந்து பொருதனர்"** (கிடங்கிப்போர் - 16)

இதன் வழி சங்க இலக்கியங்கள் முதலானவற்றில் பாசிகள் உவமைப்பொருளாக பயன்படுத்தப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

**பாரதியார் பாடல்களில் பாசி**

இருபதாம் நூற்றாண்டில் தன்னிகற்ற கவிஞராக விளங்கியவர் மகாகவி பாரதி. அவர் பாடாத பொருள் இல்லை. அவர் பல்வேறு உவமை நயங்களையும், வர்ணணைகளையும் சமூக சிந்தனைகளையும் பாடியுள்ளார். அவரது பாடலில் பாசி என்பது நாட்பட நாட்பட துர்நாற்றம்

தன்மை கொண்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.

**"நாட்பட நாட்பட நாற்றமு சேறும்
பாசியும் புதைந்து பயன்நீர் இலதாய்
நோய்க் களமாகி அழகெனும் நோக்குமோ
விதியே விதியோ தமிழ்ச்சாதியே"**

இவற்றின் வழி நோயினை உருவாக்கும் பாசிகளும் உள்ளன என்பது புலனாகிறது. ஒருசில பாசிகள் நோய் தீர்க்கும் தன்மை கொண்டவையாக உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

தமிழ் இலக்கியங்களில் பாசிகளின் தொன்மை விளக்கப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்களில் ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை முதலான இலக்கியங்களில் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன என்பது இக்கட்டுரையின் வழி அறிய முடிகிறது. மேலும் பிறநாட்டு அறிவியலுக்கு இணையாக தமிழ் இலக்கியங்களில் அறிவியல் செய்திகள் இடம்பெற்றுள்ளன என்பதையும் உணர முடிகிறது.

**துணைநின்ற நூல்கள்**

1. ஔவை துரைசாமிப்பிள்ளை உரை, ஐங்குறுநூறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை

2. ஔவை துரைசாமிப்பிள்ளை உரை, நற்றிணை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை

3. ஔவை துரைசாமிப்பிள்ளை உரை, குறுந்தொகை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை

4. இளம்பூரணர் உரை, தொல்காப்பியம், பொருளதிகாரம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை

5. புலவர் குழந்தை, இராவணகாவியம், சாரதா பதிப்பகம், சென்னை

6. பாரதியார் கவிதைகள், பாரி நிலையம், சென்னை.

7. சங்க இலக்கியங்கள், என்.சி.பி.எச்., சென்னை